# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 214/மா/2024

**நாள்: 02.01.2026**

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10 --- எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ.கோவிந்தராஜ் என்பவரின் 21.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.10.2024 அன்று பெறப்பட்டு 214/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 21.10.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள 01.05.2023 நாளிட்ட நகல் மனுவில் (உதவி ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10 அவர்களுக்கு முகவரியிட்டது) பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "கதவு எண் 12/23, 7வது அவின்யூ, அசோக் நகர், சென்னை–83 முகவரியில் உள்ள பழைய வீட்டிற்கு முன்பு உள்ள வீட்டை இடித்து, புதியதாக அடுக்குமாடி கட்டி வருவதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிட முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாயை உடைத்து மேன்ஹோல்களை அப்புறப்படுத்தி, சுமார் $3^1/_2$ அடி உயரம், 15 அடி நீளம் 50 அடி அகலத்தில் Steps / Ramp போடுவதற்கு போக்குவரத்திற்கு இடையூறாக கட்டுமான பொருட்களை நடைபாதைகளில் குவித்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இது சம்பந்தமாக சென்னை மாநகராட்சி 1913 எண்ணுக்கு 30.04.2023 அன்று போன் செய்து புகார் அளிக்கப்பட்டது. ஆக்கிரமிப்பை அகற்றி கட்டுமான பொருட்களை ஜப்தி செய்ய இம்மனு அளிக்கப்படுகிறது. (2023/705 ANH – Complaint No)." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது மற்றும் 07.04.2024 நாளிட்ட

நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. எவ்வித அறிக்கையும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, மண்டல அலுவலரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை.

4. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''சென்னை–83, அசோக் நகர், 7வது அவின்யூ, கதவு எண் 12/23ல் உள்ள பழைய வீட்டிற்கு முன்பு உள்ள வீட்டை இடித்து, புதியதாக அடுக்குமாடி கட்டி அக்கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய்களை உடைத்து மேன்ஹோல்களை அப்புறபடுத்தி, சுமார் $3^1/_2$ அடி உயரம், 15 அடி நீளம், மற்றும் 50 அடி அகலத்தில் Steps / Ramp கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து 30.04.2023 அன்று போன் செய்து புகார் அளிக்கப்பட்டது.
>
> இருப்பினும் 06.12.2025 அன்று மேற்கண்ட ஆக்கிரமிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் முழுமையாக அகற்றப்பட்டது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அதற்கான புகைப்பட நகலினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் சார்பாக இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> ''மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள அசோக் நகர் 7வது அவின்யூ, கதவு எண் 12/23 ல் உள்ள அமைந்துள்ள கட்டிடத்தின் முன்புறம் உள்ள மாநகராட்சி நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததை முழுமையாக 06.12.2025 அன்று இடித்து அகற்றப்பட்டது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான புகைப்பட நகலினை சமர்ப்பிக்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, மண்டல அலுவலர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

> சென்னை–83, அசோக் நகர், 7வது அவின்யூ, கதவு எண் 12/23ல் உள்ள பழைய வீட்டிற்கு முன்பு உள்ள வீட்டை இடித்து, புதியதாக அடுக்குமாடி கட்டி அக்கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய்களை உடைத்து மேன்ஹோல்களை அப்புறப்படுத்தி, சுமார் $3^1/_2$ அடி உயரம், 15 அடி நீளம், மற்றும் 50 அடி அகலத்தில் Steps / Ramp கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அளிக்கப்பட்ட மனுவின் அடிப்படையில், மேற்கண்ட ஆக்கிரமிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் முழுமையாக அகற்றப்பட்டது என்பதை மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை, அசோக் நகர் 7வது அவின்யூ, கதவு எண் 12/23ல் அமைந்துள்ள கட்டிடத்தின் முன்புறம் உள்ள மாநகராட்சி நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததை மனுதாரரின் புகாருக்கு பின் முழுமையாக 06.12.2025 அன்று இடித்து அகற்றப்பட்டது என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை, அசோக் நகர் 7வது அவின்யூ, கதவு எண் 12/23ல் அமைந்துள்ள கட்டிடத்தின் முன்புறம் உள்ள மாநகராட்சி நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததை முழுமையாக இடித்து அகற்றப்பட்டது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்ததை, மனுதாரரும் தனது வாக்குமூலத்தில் உறுதிப்படுத்தியதால், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 117 N.S.K. சாலை,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

5/1/26
செயலாளர்

5/1/26

1/10